# தேவனை அறிய வேண்டும்



கஷிவகூ

ஆகஸ்ட் 23,

வாரம் 8

நமீபியா

1



- நமீபியா காடுகளில் ஹிம்பா என்கிற இனமக்கள் வாழ்கிறார்கள்; இவர்கள் பகுதியளவு நாடோடிகள். அதாவது, நீண்டகாலம் நீடிக்கிற வெயில் காலத்தில் தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்காக தண்ணீர் இருக்கிற இடங்களுக்கு இடம்பெயர்ந்துகொண்டே இருப்பார்கள். மழைக்காலம் குறைவாகவே இருக்கும்; அப்போது இரண்டு மூன்று குடில்களுடன் அமைந்துள்ள தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிரிடுவார்கள். அது அந்த வருடம் முழுவதும் அவர்களது உணவுத் தேவைக்குப் போதுமானதாக இருக்கும்.
- கஷிவகூவுக்கு 24 வயது; மூன்று பிள்ளைகளுக்கு தாய். 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதியின் உதவியால் நடத்தப்பட்ட சுவிசேஷக்கூட்டத்தில்தான் அவர் முதன்முதலாக தேவனைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவரது சம்பவம் இதோ.
- அடர்ந்த நமீபியக் காடுகளில் முன்பின் தெரியாத ஒருவர் தங்கள் பகுதிக்கு வந்திருந்ததைக் கண்டு கஷிவகூ ஆச்சரியமடைந்தார்.



- அதற்குமுன் அவரைப் பார்த்தது இல்லை, இதற்குமுன் தான் சென்றிராத ஓர் இடத்திற்கு வரும்படி அந்த மனிதர் அழைத்தார். அதாவது ஆலயத்திற்கு அழைத்தார். அந்த அழைப்பு கஷுவெகூவுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. தன் குடிசையிலிருந்து 15 நிமிட நடைபயணத் தூரத்திலிருந்த ஒரு மரத்தடியில் வைத்துதான் கூட்டம் நடைபெற்றது, அங்கு சென்றாள்.
- மற்றக் குடிசைகளிலிருந்தும் பெண்களும் சிறுவர்களும் வந்திருந்தார்கள். அந்த மரத்திலிருந்து 15 நிமிட நடைபயணத் தூரத்தில் அவர்கள் வசிக்கிற பகுதியில் சுமார் 15 குடிசைகள் இருக்கும். கஷுவெகூவுக்கு அந்த ஆராதனை ஒரு புதிய அனுபவமாக இருந்தது. போதகர் பாடல்கள் சொல்லிக்கொடுத்தார், பிரசங்கம்பண்ணினார். பாடல்கள் புதிதாக இருந்ததால், கஷுவெகூவுக்குக் கற்றுக்கொள்ள கடினமாக இருந்தது. அவர்கள் யாரைப்பற்றிப் பாடினார்களோ அவரைப்பற்றி இதற்குமுன் அவள் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் பாடல்கள் பிடித்திருந்தன. அந்தப் பாடல்கள் மக்களுடைய தேவைகளை எல்லாம் சந்திக்கிற ஒரு தேவனைப்பற்றியதாக இருந்தன.



- மனந்திரும்புதல்பற்றிப் பிரசங்கம்பண்ணினார். போதகர் பிரசங்கம்பண்ணி முடிக்கிற வேளையில், தான் மனந்திரும்பினால்தான் தேவன் தன்னை இரட்சிக்கமுடியும் என்பதை கஷுவெகூ புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தாள்.
- ஒய்வுநாட்களில் அந்தப் போதகர் வந்தபோதெல்லாம் அந்த மரத்தடியில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துகொண்டாள். பிறகு அந்தப் போதகர் நமீபியாவின் வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்; அதன்பிறகு ஒரு வேதாகமப் பணியாளர் மாதம் இருமுறை வந்து அந்த மரத்தடியில் வைத்து கூட்டங்கள் நடத்தினார். அவர் வந்தபோதெல்லாம் கஷுவெகூ அங்கு சென்றாள். அந்தப் பணியாளர் அங்கு ஒரு ஆவிக்குரிய கூட்டம் நடத்தியபோதும், தினமும் அதில் கலந்துகொண்டாள். பிறகு, இரண்டு வார சுவிசேஷக்கூட்டங்கள் நடத்தியபோதும், தினமும் கலந்துகொண்டாள்.
- பிறகு அவர் ஒரு ஒளிப்பெருக்கியும், மின்னாக்கியும் கொண்டுவந்து, வண்ணப் படங்களுடன் ஜீவனுள்ள தேவனைப்பற்றிப் பேசினார். பிறகு, தேவனுடன் நித்தியமாக நாம் வாழப்போவதையும்குறித்துச் சொன்னார். கஷுவெகூவுக்கு எல்லாமே பிடித்திருந்தன.




- மூன்று பேர் தேவனை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆனால் கஷுவகூ அதற்கு முன்வரவில்லை. பிறகு அந்தப் பணியாளர், வண்டி ஒன்றை ஏற்பாடு செய்து, ஞானஸ்நானம் பெற்ற அந்த மூன்று நபர்களையும், அவர்களது நண்பர்களையும் பக்கத்து நகரத்திலிருந்த அட்வென்ட்டிஸ்ட் சபைக்கு அழைத்துச் சென்றார். வண்டியில்லாவிட்டால், ஒற்றையடி பாதையில் ஏழு மணி நேரம் நடக்கவேண்டும். ஆனால் அப்போதும் கஷுவகூ செல்லவில்லை. ஏனென்றால், அவள் தன் குடும்பத்தின் பசுக்களைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அது அவளுடைய கட்டாய வேலை. பசுக்களைக் கவனிக்காமல் விட்டால், அது தன் குடும்பத்தை அவமதித்தது போலாகும்.
- ஆனால் என்றாவது கஷுவகூ ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறாள். அதற்கு தான் ஆயத்தமாக இருப்பதாகவும் உணருகி றாள். தன் முழு இருதயத்தோடும் தேவன்மீது அன்புகூருகிறாள். “தேவன் என்னுடைய இரட்சகராகவும் என் தேவைகளைச் சந்திப்பவராகவும் இருக்கிறார். நான் கேட்கிற எதையும் அவரால் கொடுக்கமுடியும்” என்று சொன்னாள்.




- ❖ தூங்கச்செல்லும்போதும், விழிக்கிறபோதும், ஜெபிக்கிற பழக்கம் அவளுக்கு உண்டு. சுருக்கமாகவே ஜெபிப்பாள். ‘தேவனே, எனக்கு உதவிசெய்யும்’ என்று மட்டுமே சொல்லுவாள்.
- ❖ எல்லாவற்றிற்கும் மேலாக தேவனைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாள். பெரும்பாலான ஹிம்பா இனத்தவர்களைப்போல, வாசிக்கவும் கற்றுக்கொண்டாள். ஆனாலும் அவளிடம் வேதாகமம் கிடையாது. அவளுடைய மொழியில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. நமீபியாவில் ஹிம்பா மக்கள் மத்தியில் சபை செய்துவருகிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.
- ❖ 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால்தான் ஹிம்பா மக்களுக்கு சுவிசேஷம் சொல்கிற ஒரு ஊழியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறுதான் அந்தப் போதகதர் கஷுவகூவின் வீட்டிற்குச் சென்றார். அந்தக் காணிக்கையின் உதவி கஷுவகூவின் குடும்பத்திலும், அந்த இனத்தவரிலும் இன்று வரை உணரப்படுவது போல, இந்தக் காலாண்டில் செப்டம்பர் 27ம் தேதி தாராளமாகக் கொடுங்கள்.